[9th August 1965

கனம் திரு. கோ. பூவராகன் : அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது தான் முடிவு.

திரு. சா. கணேசன் : அவர் எதற்காக இறந்தார் என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் எப்படி இறந்தார் என்பதைக் கண்டு பிடித்திருப்பார்களே.

கனம் சபாநாயகர் : எதற்காக, எப்படி என்றால் ?

திரு. சா. கணேசன் : அவர் வயிற்று வலி காரணமாக இறந்தாரா அல்லது வேறு என்ன காரணத்தினால் இறந்தார் என்று சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் அடித்து உதைக்கப்பட்டு இறந்தாரா? தற்கொலை செய்து கொண்டு இறந்தாரா என்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்குமே. ஆக, இறந்ததற்குக் காரணம் தெரியாவிட்டாலும், இறந்த தன்மை என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார் என்பது முடிவு.

மத்திய சிறைச்சாலை வார்டர்கள்

* 152 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய சிறைச்சாலையிலுள்ள வார்டர்களின் வேலைப் பளுவைக் குறைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையில் உள்ள வார்டர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருப்பதனால் ஓய்வு அதிகம் இல்லாமல் ஜன்ம தண்டனை அளிக்கப்பட்டவர்களைப் போல அவதிப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு வேலை நேரத்தை இனியாகிலும் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : தேசீய நெருக்கடி காரணமாக அதைப் பரிசிலனை செய்வதாக இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய சிறைச்சாலையில் உள்ள வார்டர்களுக்கு 8 மணி நேர வேலை என்பது சேலம் சிறைச்சாலை மட்டும் தான் அமுலில் இருக்கிறது. மற்ற சிறைச்சாலைகளிலும் இது அமுல் செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அது தான் மூலக் கேள்விக்கான என்னுடைய பதிலில் இப்போது அம்மாதிரி செய்வதாக இல்லை என்று சொன்னேன்.